சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. C.ராஜேஷ், B.A., B.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.93/2023**

பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. ஹாஜாஅலாவுதின் | த/பெ: முகம்மது ஜக்ரியா |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 07.07.2026 | தாலுக்கா: |

முதல் விசாரணை...

இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் இல்லை.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். எனது நிரூபணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எந்த சொத்திற்கு வழக்கு நடைபெறுகிறது என்றால் 7029 என்ற சர்வே எண்ணிற்கு நடக்கிறது. அந்த சொத்திற்கான ஆவணம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 1933 ஆம் வருட செட்டில்மெண்ட் ஆவணம் பார்த்தேன். அதை தவிர வேறு ஆவணம் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

2. எந்த வருடம் யாரால் யாருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 2004 ஆம் ஆண்டு செல்வராணி பெயருக்கு ஆயிஷாபீவி அம்மாள் வகையறா எழுதிக்கொடுத்துள்ளனர். மேற்படி ஆவணம் எழுதிக்கொடுத்த போது நான் இல்லை. நான் மேலே சொன்ன சர்வே எண் தான் 2004 ஆம் ஆண்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. 2004 ஆம் வருட ஆவணத்திற்கு எவ்வளவு தொகை பேசப்பட்டு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டு எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.36,500/- பேசப்பட்டு பல தவணைகளில் கொடுக்கப்பட்டு அதே தொகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரையம் பேசப்பட்ட அன்றே ரூ.10,000/- முன்பணமாக சேகர் என்பவர் ஆயிஷாபீவி அம்மாளிடம் கொடுத்தார். பிறகு 3 தவணைகளில் ரூ.36,500/- கொடுத்துள்ளார்.

4. கிரைய பத்திரம் எழுதுவதற்கு முன்பே 3 தவணைகளில் தொகை கொடுக்கப்பட்டது. கிரைய பத்திரம் ஏற்பட்ட அன்று தான் கிரையம் பேசப்பட்டு தொகை கொடுக்கப்பட்டதாக பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. யாரிடம் யார் பணம் கொடுத்தார்கள் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் பற்றி எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. அதன் பிறகு பிரதிவாதி பெயருக்கு அவரது மனைவி செல்வராணி செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எந்த தேதியில் ஏற்பட்டது என்றால் 2024 ஆம் ஆண்டு ஏற்பட்டது. 2004 ஆம் வருட ஆவணத்தில் சொத்தின் வகைபாடு புஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஆவணத்தை பார்க்கவில்லை.

6. செட்டில்மெண்ட் ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தெரியாது. அந்த செட்டில்மெண்ட் பதிவு கட்டணம் யார் செலுத்தியது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சிகள் யார் யார் என்று எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் அதற்கு முன்பு ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் நான் சாட்சியில்லை என்றும் நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் காசிம்ராவுத்தர் பெயரில் உள்ளது. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் தாவா சொத்திற்கான பட்டா வாதிகளின் முன்னோரான ராமாமிர்தம் என்பவர் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது தெருக்காரர். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. பிரதிவாதி என்னை சாட்சி சொல்ல அழைத்துவந்தாரா என்றால் தெருக்காரர்கள் சொல்லி வழக்கறிஞர் அழைத்துவந்தார். தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தம் என்று கற்பனையாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2026.07.07 16:58:20 +0530

Subordinate Judge,
Tiruvarur.